உ

கணபதி துணை

ஊர்காவற்றுறையைச் சார்ந்த கரம்பொன்
கணேச்சுரதலத்தமர்ந்த
விநாயகர் சுப்பிரமணியர் மீது

# கீர்த்தனங்களும்

விஸ்வநாதசாமி விசாலாட்சியம்மை சமேத
திருவூஞ்சற்பாவும் கீர்த்தனை நாமாவளி கும்மி
பராக்கு மங்களமும் கணேச்சுரவரலாறும்
அடங்கிய

# தோத்திரப்பா.

இஃது
ஊரேழு
ப்ரம ஸ்ரீ ச. சோமசுந்தரக்குருக்கள்
ப்ரம ஸ்ரீ மானேஜர் பொ. கணபதிஐயரவர்கள்
விரும்பியவண்ணம்

நயினை
ஸ்ரீ சு. ஐயாத்துரைச் சோதிடரால்
இயற்றியது.

கமலாசனி அச்சுநிலையம், யாழ்ப்பாணம்.

# கணபதீச்சுரவரலாறு

விராட்புருடனுக்குச் சத்திபாகமாய் அமைந்த மண்டல திவு முதல் [காம்பொன்] இறுதியாகவுள பகுதிக் காரணப் பெயரெலாம் ஒவ்வோர்காலத்து ஆங்காங்கு நிகழ்ந்த காரியங்களாலேற்பட்டனவன்றி ஒருவராலமைத்தன வல்லவென்பது யாவர்க்குமொத்த துணிபாம். [ஊராத்துறை] ஊர்காவற்றுறையானது இவ்விடத்தில் முன்னோர்ஞான்று விஷ்ணு பன்றிரூபமாய் வந்து கரையேறினமையினால் இதுபெயராயது. [காம்பொன்] விட்டுணுவை இலட்சுமி பூசித்தது இரு கைநிறைந்த பொன் பெற்றமையால் இப்பெயராயது. இந்நகரிலன்னாட்களில் விட்டுணு சமயமே பரவியிருந்தது இங்குள்ளார் வைஷ்ணவர் இவரிற் சிலர் தற்போது கிறிஸ்தவர்களாய் சமயவழிபாட்டிற் குறையாதவராயும் ஞாயிறு நாளி லதிபத்தியுடன் பகவானைப் பூசிப்பவராயும் குருபக்தி அடியார்பக்தியிற் குறையாதவராயுமிருக்கின்றனர். சிலர் சிவபக்தியுடையோராய் தத்தம் நிலைமைக்கேற்ப வாழ்கின்றனர். பொன்னாலை வல்லிபுரம் முதலிய விட்டுணுதலங்களில் ஞாயிறுநாளை விசேஷநாளாகவும் அதினும் மார்கழிமாச ஞாயிறு வாரத்தையும் மாசத்தையும் விசேஷமாய்க் கொள்வதறிக? இதற்குதாரணமாகச் சிவன்படைவீரர் தொகையினும் மாயன்படைவீரர் கடையராதியரே இக்கிராமத்தில் கூடியவகுப்பார். திருப்பாற்கடலிலமிர்தம் கடைந்தபோது எவர்க்கும் அமிர்தம் மறைந்து பின் இவர்கடைய அமிர்தம் கிளம்பியதால் கடையர் எனும் பெயர்பெற்றனர். இவ்விடத்து தான்றோன்றியாய்ப் பரமனைச் சுட்டபுலமெனும் இந்நிலத்தே அதிபூர்வ சிவாலயமொன்றுள்ளது. அதை பிரமவிட்டுணுக்களுக்கும் தேவர்களும் பூசை செய்தனரன்றி மானுடர் பூசையே இடையாது. அதனை விட்டுணுவின் மகன் ஐங்கனை செலுத்து மன்மதனெரித்தமையால் இதுகாறும் மறைந்து தற்போது கணபதேச்சுரமெனுந் திருநாமத்தோடு விளங்கியது. இதன் தென்மேற்கே உள்ள அயிற்றுமபுலம் மன்மதனது அரசிருக்கை மண்டபமாம். இவையனைத்தும் தத்துவராமாயணம் ததீசிராமாயணம் போதாயனராமாயணம் லங்காசூதசங்கிதை முதலிய மேனூலாராய்ச்சி வல்லார்வாய்க் கேட்டுணர்க. ஆதலால் தமியேனும் யானைகண்ட குருடர்போல் சிறிதறிந்தளவில் எழுதலானேன்.

குணநாடிக் குற்றமு நாடியவற்றுள்
மிகைநாடி மிக்ககொளல்

# தோத்திரப்பா

வாணி அசரீர் வாழ்த்துப்பா

விருத்தம்

திருமருவு தென்னிலங்கை தன்னிலுள்ள திரைமருவு கரம்பொனகரதனில்மே
உருமருவு கணபதீச்சுரத்தமர்ந்த வுயர்விஸ்வநாதர் விசாலாட்சிபேரில் (வும்
அருமருவு செந்தமிழா லூஞ்சல்பாட வயன்மனையி னசரீரி வாக்கல்லாது
வருபொருளினுட்கருத்தைத் தமியேனென் றும்வகுக்கவறியேன்புலவீர்வாழ்த்
துவீரே

அவையடக்கம்

ஆசிரிய விருத்தம்

திருமாலும் நான்முகனும் ரூபமாறித்
திசைதோறுந் திரிந்தலைந்தித் தீபமேவி
வருநாளன் றாராத்துக் துறையாமிங்கு
வசிப்போரும வைஷ்ணவா மரபாரென்னப்
பெருமாயன் றேவிதங்கு மிடமிதாலே
பெயர்கரம்பொன் னிந்நகரிற் சிவலிங்கத்தி
னுருவாகா வென்றுவரி மகனுஞ்சுட்டான்
உததி பரமனைச்சுட்ட புலமென்றேதே

அப்பிரம குலதீப வதிபன்றனும்
அணலைநகர் கரம்பொனகரனுதி வாழ்ந்த
செப்பரியசிவாகம நான்மறைக ளோதித்
சித்தாந்தசைவா சாரியராய் வாழ்ந்த
உத்தமர்பொன் னையர்நாடோ றுஞ்செய்யு
முருலிங்கமேக முமேயொருங்கு சேர்ந்த
புத்திரனும் கணபதி ஐயரென்று
புகலுவாய் கணேச்சுரத்தின் பொலிவுபார்த்தே

விஸ்வநாதசாமி விசாலாட்சி சமேத

## திருவூஞ்சற்பா

வெண்பா

சீர்கல்வி செல்வமிசை சித்திமிகச் சிறக்கும்
பேரின்பமா யுள்பெருகுமே—ஊர்காவ

வந்துறைசே ராலயமா மக்கணபதீச் சுரத்துத்
தந்தி முகன்று டொழுவே தான்

சீராரும் மறைசிவநூல் காலதாகச்
சிறந்த வாகமமுடிவே விட்டமாக
ஏராரும் வன்னமெலா மிழையதாக
எழிலாரும் பதமதுவே கயிறதாக
நேராரு மைந்தெழுத்தே பலகையாக
நினைப்பரிய ஓங்காரம் பீடமாக
வாராரும் கணபதீச் சுரத்தில்வாழும்
வரவிசா லாட்சிவிஸ்வ ராடீரூஞ்சல்

திருமாலும் பிரமனுமே வடந்தொட் டாட்ட
தேவர்குரு வரசியொடு சீர் பாராட்ட
வருபூத கணநாதர் வன் சீராட்ட
வானவரு முனிவோரு மாசி சூட்ட
அருநாத விந்துசிலம் பொலிதான் காட்ட
ஆதவர் சந்திரர் கவிகையாடி தீட்ட
முருக பிரான்கண்டு விழிகளியே காட்ட
மூதல்விசா லாட்சிவிஸ்வ ராடீரூஞ்சல்

இந்திரனே கோடிகத்தைக் கையில்வாங்க
எரிக்கடவுள் தனித்தீப மெடுத்துத்தாங்க
வந்து வாயுபகவான் விசிறிவீச
வருணனுமே பூமாரி பொழிந்துநிற்க
மூந்தநம னிருதிபடை படிகத்தோங்க
முதலளகா பதிகையி லடப்பை தூங்கச்
சிந்தனைசெய் அன்பரா னந்தம் வீங்கத்
திருவிசா லாட்சிவிஸ்வ ராடிரூஞ்சல்

ஒப்பில் கணநாதர் கைத்தாளம் போட
உயர்பூதர் மத்தளத்தி னொலியே காட்ட
செப்புறு தும்புரு நாரதருமே பாட
சேரும்விஞ் ஞையர்யாளிற் சுருதி கூட்ட
தப்பி லரம்பையர்கள் தனிநடன மாட
சாரு மடியாரகத் தஞ்ஞான மோட
மைப்படியும் கரம்பனகர் கணேச் சுரத்தின்
வாழ்விசா லாட்சிவிஸ்வ ராடீரூஞ்சல்

## வாழி

போற்றுமறை பூசுரரும் வாழிவாழி
புரவலர் செங்கோல்வாழி புவியோர்வாழி
காற்றுமுகில் வாழிமழை நிதமும்வாழி
கருதுமா வினங்கள்மனங் களித்துவாழி
சாற்றுழவர் வைசியரின் தருமம்வாழி
தருகரம்பொ னகரார் சந்ததமும்வாழி
மாற்றுயரும் கணபதையர் வம்சமுவேழ்
வாழியாமின் னூஞ்சல் வாழிமாதோ

## விநாயகர் கீர்த்தனை

பல்லவி

சித்தி விநாயகனே திருவருள்தா தூயவனே

அனுபல்லவி

பக்தியுட னேதினமும் பாடித்துதித் திடவே
சித்தியொடு புத்தியெல்லாம் சிறக்கவருள் நாயகனே — சித்

சரணம்

அத்திமுக வுத்தமனே யானருளும் புத்திரனே
வித்தகனே காவிரியை வேள்வியிறைக் கீந்தவனே
இத்ததிபி லென்றனையே யீடேற்ற வேணுமையா — சித்

சேந்தாழம்பூ என்றமெட்டு

## விஸ்வநாதர் விசாலாட்சி பேரிற் கீர்த்தனை

பல்லவி

நந்தாவனந் தான்றிகழும் நற்கரம்பொன் வாழுரானே

அனுபல்லவி

சிந்தைமிக மகிழ்ந்தேன் சேவடியை நான்புகழ்ந்தேன்
சீக்கிரம் வந்தெனைக் காக்கவேணு மையா
சித்திதா விஸ்வநாதனே—இத்தருதி —நந்தா

சரணம்

பஞ்சகிருத் தியம்செய் பாகாதனே
பாகவிசா லாட்சிபத் துவாதனே
சந்ததமும்போற்றினேன் உந்தன்சீர் சாற்றினேன்
பந்தனைதீர்த்துமே எந்தனைக் காத்தருள் —நந்தா

உயிர்க்குயிராய கயிலைக்கிறைவா உத்தமவித்தகசோதியே
உந்தன் திருப் புகழேஓதுகின்ற என்பவமே
ஒன்றுமிலாதற உன்றனை நம்பினேன்
ஓதுவிசா லாட்சிமாதே யெனக்கருள் —நந்தா

## முருகன் கீர்த்தனை

பல்லவி

குருநாதனே யருள் புரிநாதனே —குகா

அனுபல்லவி

அரனூர் திருநுதல் வருநாதனே சாமி
ஐயவுன் பாதமே மெய்யாக நம்பினேன் —குரு

சரணம்

சரவண பவ குக சண்முகனே வேலா
சார்ந்த வடியவர் தமக்கே யநுகூலா
வரத சிவ சுத குருபரனே சீலா
வழுத்தினே னன்பாத மெனக் கருள்வாய் கோலா —குரு

சங்கத்திலே யுறையுந் தமிழ்ப் புலவனே
தாவுங் கலாபத் தனிமயில் வலவனே

மங்கையர் வள்ளி தெய்வானையின் தலைவனே
வழுத்தினே னுன்பாத மெனக்கருள் மெய்யனே — குரு

ஆரணம் புகழ்கின்ற அற்புத ஆதியே
அசுர சம்மாரஞ்செய் அருட்பரஞ் சோதியே
நாரண னிந்திரன் நயக்கும்சீ ரறுமுகா
நம்புமையாத் துரைக் கருள் முருகையனே — குரு

## நாமாவளி

கணபதிச் சுரத்தமர் கண்ணியனே கணங்களெல்லாம்புகள் புண்ணி
சணமதி லருள்புரி சங்கரனே சற்குருவாய்வரு முத்தமனே [யனே

தவமுனி வோர்தொழு மெய்ச்சுடரே தற்பரனே கருணைக்கடலே
அவனியி லுன்புகழ் யான்பாட அன்பகலா வரமருள்வாயே.

அரியயனுந் தேடி யறியாத யற்புதனே யடியார்க் கெளியாய்
பரிகரியாக்கிய பண்ணவனே பழவினை தீர்த்திடு பாக்கியனே.

திருவிசாலாட்சியை யுடையவனே திருமகள் கொழுநனே றுடையவ
மருமத னெரிதலமாசதுபோய் வருகதிர்போல வெழுந்தவனே. னே

சுடுபுல மதனில் வேகாதவனே சுட்டிடவுந்துளிர் விட்டவனே
கெடுதிகள் வாரா தருளீவாய் கெணபதி சரமமர் விஸ்வேசா.

சடுதியி லீவாய் சாலோகம் தற்பரனே சாமிப்பியமும்
விடுகுவையே சாரூபமது வீட்டிட மேற் சாயுச்சியமும்

பவவினை தீர்த்தே நல்கிடுவாய் பரமனைச்சுட்ட புலமீதில் [மே
சிவவினை வாகும் தேன்பால்போற் தெள்ளமுதைத்துதி செய்வோ

## கும்மி

வேதவொலி குறையாத கணேச்சுர
விஸ்வநாதர் விசாலாட்சிக் கொரு

நேதமுள கும்பிபாடுதற் கைங்கரன்
கிர்பைசெய் வாணி துணையாமே.

முந்துபரபனைச் சட்ட புலத்து
முளைத்த வேகாவித்தை முற்சுடரை
சிந்தை செய்வார்க்கு இயமபயமிலைத்
தேர்ந்தறி வாயெடி ஞானப்பெண்ணே.

சந்ததிகல்வி சம்பத் தொடாயுள்
சார்ந்திடு சற்குணம் சாதுரியம்
வந்திடும் விஸ்வநாதன் விசாலாட்சி
வாசலிற் செல்லுவோம் வாருமெடி.

வாசலிற்செல்லப் பழவினை யென்கின்ற
மாயா மலங்கள் கன்றுலகப்
பாசம்போய் யென்று பரமுத்தியெய்தும்
பலனுண்டு பாரடி ஞானப்பெண்ணே.

பாடுபட்டுப் பணந்தேடிச் சுகித்தென்ன
பாராளும்யோக மிருந்தும் பலனென்ன
நாடும் விஸ்வநாதன் விசாலாட்சி
நம்பனை நித்தம் நினையுமெடி.

## பராக்கு

வருவாய் சடையீசா விஸ்வவடிவா பராக்கு
தருவாய் முழுமுதலே வரமருள்வாய் பராக்கு

அம்மே விசாலாட்சி யுன்றனருளே பராக்கு
செம்மே யுனைத்தொழவே யருள்செய்வாய் பராக்கு

## மங்களம்

சித்திவிநாயகற்கும் மங்களம்
சிவசுப்பியமண்யருக்கும் மங்களம்

சத்திவிசாலாட்சிக்கும் மங்களம்
சாமிவிஸ்வநாதருக்கும் மங்களம்

## கலித்துறை

இன்னம் பிறவி யெடுத்தலைத் தேங்கு மியல்புடையேன்
தன்னங் தனியாய் கணேச்சுர வாலயங் தானுழைந்து
முன்னம் கைகூப்பவெம் சற்குரு நாதனும் முற்றுணரும்
கன்னன் கணபதி ஐயரும் பாச்சொலக் கற்பித்தரே.